

கலாவித்தகர்

சிங்கராசா செந்தூரன் அவர்களின்

கலைமகனும்

திரு.திருமதி நதீசன் ஜெயவாணி தம்பதியினரின்

தலைமகனுமாகிய

## செல்வன் நதீசன் ஜனுசன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்



14.07.2013

திரு.திருமதி நதீசன் ஜெயவாணி தம்பதியினரின் தலைமகனும்
கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன் அவர்களின் கலைமகனுமான

செல்வன் **நதீசன் ஜனுசன்**

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

காலம்: 14.07.2013, ஞாயிற்றுக்கிழமை, பி.ப 2.00 மணி

இடம்: முத்தமிழ்மன்ற கலாசார மண்டபம்

அரங்கின் தலைவர்

## கலாவித்தகர் சிற்றம்பலம் சிவஞானராஜா

(ஓய்வுநிலை இசை ஆசிரியர்)

பிரதம விருந்தினர்

## கலாநிதி த.கலாமணி

(சட்டத்துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்

## திரு.வீ.கணேசராஜா

(அதிபர், யா/ இந்துக் கல்லூரி)

## திருமதி லோகநாயகி இரகுபதி

(ஓய்வுநிலை அதிபர், தலைவர், சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபை)

## திரு.இ.ஆனந்தன்

(ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

# நிகழ்ச்சி விரிப்பு

| | |
|---|---|
| மங்கல விளக்கேற்றல் | |
| இறை வணக்கம் | : **செல்வி ஜஸ்மி நதீசன்** |
| வரவேற்புரை | : **டாக்டர் ஈ.சுந்தரேஸ்வரன்** |
| தலைமையுரை | |
| ஆசியுரை | : **கலாபூஷணம் க.ப.சின்னராசா** (முன்னாள் வருகைதரு விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்) |
| குரு வணக்கம் | |
| கலைஞர் கௌரவிப்பு | |
| நிகழ்வுக்கு மகுடமிடும் இசையரங்கு | |
| சிறப்பு விருந்தினர் உரை | |
| பிரதம விருந்தினர் உரை | |
| மதிப்பீட்டுரை | : **முதுகலைமாணி க.கஜன்** (விரிவுரையாளர், நடனத்துறை, இராமநாதன் நுன்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம்) |
| நன்றியுரை | : **செல்வன் ந.ஜனுசன்** |



# குருவின் ஆசிச் செய்தி

மாதா, பிதா, குரு, தெய்வ பாதம் பணிந்து இன்று ஏழாலையூரில் செல்வன் ந.ஜனுசன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் அரங்கேறுகின்றது.

ஈழத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு மிருதங்க அரங்கேற்றத்திலும் நன்றியோடு நினைந்து போற்றப்பட வேண்டியவர் பேராசான் ஏ.எஸ் இராமநாதன் அவர்கள். அவரின் கலைவழித் தோன்றலில் மனிதருள் மாணிக்கமாக விளங்குபவர் எனது குருநாதர் கலாபூஷணம் க.ப. சின்னராசா ஆவார். எனது ஆசானின் மாணவர்கள் ஈழத்தில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் ஆடல்வல்லானுக்கு அழகு சேர்த்த அற்புத நாதத்தை வரண்முறை தவறாது ஒலிக்கச் செய்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஒரு தெய்வீக நாதமே இன்று ஏழாலையில் செல்வன் ந.ஜனுசனின் கரங்களில் பிரசவிக்க இருக்கிறது.

சைவமும், தமிழும், பண்பாடும் ஒன்றிணைந்த வாழ்க்கை நெறியில் பல புகழ் பூத்த கலைஞர்களை வளர்த்தெடுத்த புண்ணிய பூமியில் கலையுணர்வு மிக்கவர்கள் திரு.திருமதி நதீசன் ஜெயவாணி தம்பதியினர். இவர்களின் தலைமகன் ஜனுசன் யா/ இந்துக் கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயின்று வருகின்றார். நல்ல பண்புடைய ஏனைய மாணவர்கட்கு எடுத்துக்காட்டான மாதா, பிதா, குரு பக்தியுடைய மாணவன்.

இன்று எமது பிரதேசத்தின் தனித்துவங்கள் பல மறைந்தும், மறந்தும் போய்விட்டன. வளப்படுத்த வேண்டிய பெற்றார்களில் இன்று பலர் தமது சுயகௌரவத்திற்காக கல்வியே முழுமையான வாழ்க்கையாக பிள்ளைகளை நெறிப்படுத்துகிறார்கள். ஆனால் மனித வாழ்வு என்பது பல அலகுகளோடு ஒன்றிணைந்தது. அந்த வகையில் ஆன்மீகம், கல்வி, கலை, விளையாட்டு, பொழுதுபோக்கு, சமூக தொடர்பாடல், உற்றார் உறவு போன்றன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஆற்றல், அனுபவம், ரசனை ஊடாகவே மனிதன் முழுமை அடைகிறான்.

இங்கு ஜனுசனின் பெற்றோர் இன்றைய நவநாகரிக பெற்றார் சமூகத்திற்கு முன்மாதிரியாகத் தமது பிள்ளையை கல்வியில் சிறந்து விளங்குவது போன்று கலைத்துறையில் மிருதங்கம், சங்கீதம், கீபோட் போன்ற துறைகளிலும் விளையாட்டில் துடுப்பாட்டம் மற்றும் மெய்வல்லுநர் நிகழ்வுகளிலும் ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளிலும் தேவைக்கேற்ப பொழுது போக்கு அம்சங்களிலும் ஈடுபடுத்தி வளர்க்கின்றனர் என்பது கண்கூடு. அத்தகைய முற்போக்கான ஆழமான சிந்தனையின் செயல்வடிவமே இன்றைய அரங்கேற்றம்.

ஜனுசன் அவர்கள் தமது மிருதங்க ஆரம்பத்தினை இசைக்கலைமாணி சு.வரதராஜா சர்மா அவர்களிடம் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இன்றைய அரங்கு மாணவனின் வளர்ச்சிப்பாதையில் ஆசிரியர் அவர்கள் போற்றப்பட வேண்டியவர்.

அரங்கேற்றம் என்பது ஓர் அறிமுகவிழா. தான் கற்ற நல்ல வித்தையினை அதன் பால் கிரகிக்கப் பெற்ற அனுபவங்களை ஒருமித்த கலைஞர்கள், சான்றோர்கள் முன் அறிமுகப் படுத்தும் நிகழ்வாகும். அரங்கேற்றம் காணும் ஜனுசன் இயல்பாகவே கலை ஞானம் உடையவர். இந்த வகையில் இவர் மேலும் கலைத்தேடல் உடையவராய் நிறைவான கலைஞானம் பெற்று கலையுலகில் ஈடில்லா பல சாதனைகள் ஆற்றி பெற்றோருக்கும் தனது நாட்டிற்கும் புகழ் சேர்க்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சியும் குருநாதரைப் பணிந்தும் பூரண ஆசிகளை வழங்கி மகிழ்கிறேன்.

- சுபம் -

**சிங்கராசா செந்தூரன்**
ஆசிரியர்,
யா/சென்ஜோண்ஸ் கல்லூரி.





## ஆசியுரை

நதீசன் ஜெயவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜனுசன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றவிழா நடைபெறுவதையிட்டு மிகவும் சந்தோஷம். இவரது குரு கலாவித்தகர் திரு.செந்தூரன் அவர்களின் வழிகாட்டலில் 4ம் தரத்தில் அடியெடுத்து வைக்கின்றார். இவர் மென்மேலும் பல கலைகள் கற்று இன்னும் பல மேடையேற்றங்கள் செய்து பல வெற்றிகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென சாளம்பை முருகப்பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ கி.சோதீஸ்வரக் குருக்கள்**
பிரதம குரு
சாளம்பை முருகமூர்த்தி ஆலயம்
கோட்டைக்காடு, மல்லாகம்.



## ஆசியுரை

கலைகளிலே இசைக்கலை மிகவும் சிறந்தது. இசைக்கலையின் உயிர்நாடியே இசை வாத்தியங்கள் ஆகும். வாத்தியங்களின் வரிசையிலே மிருதங்கத்திற்கு தனிச் சிறப்புண்டு. அதாவது சிவபெருமான் திருநடனமாட நந்திகேஷ்வரப் பெருமானால் மிருதங்கம் இசைக்கப்பட்டது. ஒரு கலைஞனின் வாழ்வில் அரங்கேற்றமானது புத்துயிர் அளிப்பது போலானது. அந்தவகையில் கலாவித்தகர் திரு.சி. செந்தூரன் ஆசிரியர் அவர்களின் மாணவனாகிய செல்வன் ந.ஜனுசனின் அரங்கேற்றம் நிகழ்வது பாராட்டுவதற்குரியதும் மகிழ்ச்சியடைவதற்குரியதுமாகும்.மேலும் யாழ்/இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வரும் மாணவனாகிய ஜனுசன் நான்காம் தரம் வரை மிருதங்கக் கலையினைப் பயின்றுள்ளார். இவர் மென்மேலும் மிருதங்கக் கலையிலே புகழ் பூத்த கலைஞனாக மிளிரவேண்டும் என எல்லாம் வல்ல சிவஞான கருணாகரப் பிள்ளையார் திருவருளும் குரு ஆசியும் கிடைக்க ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ செ.சுகுமாரக் குருக்கள்**
பிரதம குரு
சிவஞான கருணாகரப் பிள்ளையார் தேவஸ்தானம்
அளவாவோடை, சுன்னாகம்.



# குருவின் ஆசானின் ஆசியுரை

தொண்மையும், தண்மையும், நுண்மையுமான லயக்கோலங்கள் அமைந்து விளங்கும் ஆனந்த வாத்தியம் மிருங்கம் ஆகும். ஆடல், பாடல் போன்ற அனைத்து இசைகளுக்கெல்லாம் பக்கவாத்தியத்திற்கேற்ற தக்க வாத்தியமாகப் பரிணமிப்பது மிருதங்கமாகும். நந்தியெம்பெருமானாரலும், நாராயணராலும் இறைவனின் திரு நடனத்திற்கு வாசிக்கப்பட்டதும், லயநாத ரூபமாய் அமைந்து விளங்குவதும் தண்ணுமை எனும் மிருதங்கமாகும். இத்தகைய சிறப்புமிக்க லய வாத்தியத்தை செல்வன் ந.ஜனுசன் மிருதங்கக் கலாவித்தகர் திரு.சி.செந்தூரன் ஆசிரியர் அவர்களிடம் முறையாகப் பயின்று (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று மேடைப்பிரவேசம் செய்ய இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இசையோடு லய, லலித கலைகள் எல்லாம் எல்லோருக்கும் எளிதாக அமைவதில்லை. இதற்கு மாதா, பிதா, குரு , தெய்வ அனுக்கிரகம் மிகவும் அவசியமானதாகும். இவர் வடஇலங்கைச் சங்கீத சபையினரின் மிருதங்கப் பரீட்சையில் தரம் 3ல் விசேட சித்தி பெற்றவராவார்.

பிள்ளைகளை நல்ல வண்ணம் ஆக்குவதும், ஊக்குவதும் பெற்றோராகிய தாய், தந்தையரது கடமையாகும். திரு.திருமதி நதீசன் ஜெயவாணி தம்பதிகளின் தலைமகன் செல்வன் ஜனுசன் அவர்களை நல்ல வண்ணம் வளர்த்து வளம் படுத்திய அன்புப் பெற்றோருக்கும், முன்னணி மிருதங்கக் கலைஞர்களாக விளங்கும் எனது அன்பு மாணவர்களில் ஒருவரும், மிருதங்கக் கலாவித்தகருமாகிய திரு.சி.செந்தூரன் (ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் நெறிப்படுத்தலின் மூலம் இன்று அரங்கப் பிரவேசம் செய்ய உள்ள செல்வன் ஜனுசன் அவர்களின் முயற்சியினையும், ஆசிரியரின் ஆக்கப்பணிகளையும் வியந்து பாராட்டுகின்றேன். இவர் திரு.செந்தூரன் அவர்களின் இரண்டாவது அரங்க மாணவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாதா, பிதா, குரு, தெய்வ பாக்கியம் நிறைந்த செல்வன் ஜனுசன் அவர்கள் அரங்கப் பிரவேசத்தின் மூலம் சிறப்புற்றோங்கவும் இக்கலை மூலம் பெற்றோருக்கும், குருநா தருக்கும் பெருமை பெற்றுத் தரவும் எல்லாம் வல்ல இறைவனை யாசித்தும் எனது அன்பு ஆசானின் திருவடி பணிந்தும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

**கலாபூஷணம் க.ப.சின்னராசா**



# வாழ்த்துச்செய்தி

ஏழாலை முத்தமிழ்மன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறுகின்ற செல்வன் நதீசன் ஜனுசன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தின்போது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நதீசன் ஜெயவாணி தம்பதிகளின் புதல்வரான ஜனுசன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே, தரம் 10இல் கல்வி பயில்கின்றார். வடஇலங்கை சங்கீதசபையின் நான்காம் தரத்தில் கல்வி பயிலும் மாணவரான இவர், கலாவித்தகர் திரு.சி.செந்தூரன் அவர்களிடம் மிருதங்கத்தை முறையாகக் கற்றுக் கொண்டு இன்று அரங்கேற்றம் காண்கின்றார்.

இன்று மாணவர்களிடையே உள்ள பன்முக ஆற்றல்களை இனங்கண்டு கொண்டு அவர்களின் குறிப்பான ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கருத்து அழுத்தம் பெறுகின்றது. இதன்பேறாக பன்முக நுண்மதி (Multiple Intelligence) என்ற எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இசை சார்ந்த நுண்மதி என்பது இப் பன்முக நுண்மதிகளுள் ஒன்று. அவ்வகையில் செல்வன் ஜனுசனின் இசை சார்ந்த நுண்மதியை இனங்கண்டு கொள்வதற்கும் வளர்த்தெடுப்பதற்க்கும் இந்த மிருதங்க அரங்கேற்றம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது.

இசை சார்ந்த பிற கலைகளிலும் செல்வன் ஜனுசன் கொண்டுள்ள ஈடுபாடானது அவரின் இசை நாட்டத்துக்கான சான்றாகும். சங்கீதம், ஓகன் என்பவற்றைக் கற்றுக் கொள்வதிலும் அவற்றினூடாகத் தமது இசையாற்றலை வெளிப்படுத்துவதிலும் கூட ஜனுசன் அதிக அக்கறை காட்டி வருகின்றார். யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவனான செல்வன் ஜனுசன் இக்கல்லூரியின் விளையாட்டுத் துறை அணியிலும் இடம் வகிக்கும் மாணவன் என்பதும் கூட பெருமைக்குரியதே. அத்தோடு இவரது தந்தை திரு.க.நதீசன் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் நான் கற்பித்த காலத்தில் என்னிடம் கல்வி பயின்ற மாணவன் என்பதும் பெருமைக்குரிய விடயம். செல்வன் ஜனுசன் கல்வியிலும் கலைகளிலும் மேன்மை பெறவேண்டும் எனவும் அவரின் எதிர்காலம் சிறக்க வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்தித்து அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**கலாநிதி த. கலாமணி**
சட்டத்துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## பல்துறை ஆற்றல் வாய்ந்த ஜனுசன்

உலகம் இசைமயமானது, இறைவன் இசைவடிவானவன். இசையில் மிருதங்க இசை தனித்துவம். நந்திதேவரின் திருக்கரங்களில் தவழ்வது. அத்தகு சிறப்பு வாய்ந்த மிருதங்கக் கலையை நதீசன் ஜெயவாணி தம்பதிகளின் புதல்வன் செல்வன் ஜனுசன் கலாவித்தகர் சி.செந்தூரன் அவர்களிடம் மிருதங்கக் கலையை முறையாகக் கற்று இன்று (14.07.2013) அரங்கேற்றம் செய்கின்றமை எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

செல்வன் ஜனுசன் எமது கல்லூரியில் தரம் 10ல் கல்வி கற்கின்றார். வட இலங்கை சங்கீத சபையின் நான்காந் தரத்தில் கர்நாடக சங்கீதம் கற்பதுடன் ஓகன் இசைக்கருவியை வாசிக்கும் திறனையும் பெற்றுள்ளார். இவற்றுக்கு மேலாக எமது கல்லூரி துடுப்பாட்ட அணியிலும் இடம்பெற்றுள்ளார்.

இத்தகு பல்துறை ஆற்றல் வாய்ந்த மாணவனை அவனது மிருதங்க அரங்கேற்றம் நிகழும் இந்நன்நாளிலே பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி இருக்கும் சிவஞான வைரவப் பெருமான் ஜனுசனுக்கு எல்லா நலன்களையும் வழங்கியருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வீ.கணேசராஜா**
அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி.





# வாழ்த்துச்செய்தி

குருதியுறைந்த இந்த மண்ணிலே எமது பாரம்பரியக் கலைகளை எல்லாம் நாம் இழந்து நிற்கின்ற இந்தக் காலகட்டத்திலே செல்வன் நதீசன் ஜனுசன் மிருதங்கக் கலையை ஆவலோடு பயின்று அரங்கேற்றம் செய்வது பாராட்டுதற்குரிய விடயமாகும். இவருடைய குரு மிருதங்க வித்துவான் கலாவித்தகர் திரு.சி.செந்தூரன் அவர்கள் சிறந்த கலைஞன் என்ற பெரும் பாராட்டைப் பெற்றதோடு மட்டுமல்ல. மாணவர்களுக்கு இக்கலையைப் பக்குவமாகப் பயிற்றுவிப்பதிலும் அபார திறமை கொண்டவர். எனவே இவரைக் குருவாகப் பெற்ற செல்வன் ந.ஜனுசன் அவர்களுக்கு அரங்கேற்றம் செய்வதற்கு சகல தகுதிகளும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவர் தனது ஆரம்பக்கல்வியை ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயத்தில் கற்று தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று தற்பொழுது யாழ்.இந்துக் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்று அப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார். இவர் மிருதங்கக் கலையோடு சங்கீதம் (வாய்ப்பாட்டு). ஓகன் போன்ற கலைகளையும் மிகவும் ஈடுபாட்டுடனும். ஆவலுடனும் கற்பது ஒரு சிறப்பு அம்சமாகும். அத்துடன் கல்வி. கலைகள் என்பவற்றோடு மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் முக்கியமாகத் துடுப்பாட்டத்தில் கல்லூரி அணியில் அங்கம் வகிப்பதும் பாராட்டுக்குரிய விடயமாகும். இவரது பெற்றோர் நதீசன் ஜெயவாணி அவர்கள் தமிழ். இந்து கலாசாரங்களைப் போற்றுபவர்கள் என்பதால் அவர்கள் தங்கள் பிள்ளையின் அறிவை விருத்தி செய்வதோடு பிள்ளையின் இயல்பான உள்ளாற்றலை இனங்கண்டு இணைப் பாட விதான செயற்பாடுகளான இசைத்துறையிலும். விளையாட்டுத் துறையிலும் ஈடுபடுத்துகின்றனர். தங்கள் பிள்ளை நல்லொழுக்கத்துடன் வளர்ந்து. சமூகத்லே நல்ல பிரஜையாக உருவாக வேண்டும் என்ற பேராவலுடன் தமது பிள்ளைக்கு வழிகாட்டும் பெற்றோரை வாழ்த்தி எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்கள் சமூகத்தின் சொத்து செல்வன் நதீசன் ஜனுசன் அவர்களின் அரங்கேற்றம் வெகு சிறப்பாக அமைய என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது பெற்றோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர் தொடர்ந்து பல கலைகளையும் கற்று வளர்ச்சியுற்று தமிழ் சமூகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் வாழ்வில் செழிப்புடனும். மகிழ்வுடனும் சிறப்பாகப் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்றும் எல்லாம் வல்ல சாளம்பை முருகனை வேண்டி என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி லோகநாயகி இரகுபதி**
ஓய்வுநிலை அதிபர்.
தலைவர், சாளம்பை முருகமூர்த்தி ஆலயம்
கோட்டைக்காடு. மல்லாகம்.



# வாழ்த்துரை

எமது இனத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை அழித்தொழிக்கும் கைங்கரியங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இப்படியான ஒரு இசை அரங்கேற்றம் இடம்பெற இருப்பது மிகவும் போற்றத்தக்க செயலாகும்.

செல்வன் ஜனுசன் அவர்கள் ஏட்டுக் கல்வியோடு மட்டும் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட்டு தனக்கும் தான் சார்ந்த சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு நல்ல மாணவனாக மிளிர்வது மகிழ்ச்சிக்குரியது. அவரது தந்தையும் இசையில் ஈடுபாடு கொண்டவர். எனவே தனது தந்தையின் வழியில் இவரும் கலைத்துறையில் பல சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல சாளம்பை முருகன் அருள்கிட்ட வேண்டி அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**இ.ஆனந்தன் ஜே.பி**
ஓய்வுநிலை பிரதி அதிபர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
முன்னாள் தலைவர்,
சாளம்பை முருகமூர்த்தி ஆலயம், மல்லாகம்.





# வாழ்த்துச்செய்தி

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளுள் பண்ணும் பரதமும் சிறப்பு வாய்ந்தது. அந்த வகையில் எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வியினை சிறப்புடனும். ஆர்வத்துடனும் கற்று தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது யாழ்.இந்துக்கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயின்று வரும் எனது அன்புக்குரிய மாணவன் செல்வன் ந.ஜனுசன் 14.07.2013 அன்று முத்தமிழ் கலாசார மண்டபத்திலே சிறப்புடன் மிருதங்க அரங்கேற்றம் பெறுவதை யிட்டு பெருமையடையும் நான் அவருக்கு இனிய வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

இவர் நதீசன் ஜெயவாணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாக அவதரித்தவர். செல்வன் ஜனுசன் அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்து மிகவும் தன்னடக்கமான ஒழுக்கசீலனாக கற்று வந்தார். கற்கும் காலத்திலும் இசைத்துறையில் மிக்க ஆர்வம் காட்டி வந்தார். அந்த வகையில் மிருதங்கக் கலைத்துறையில் முதற் காலடி எடுத்து வைத்த இவர் புகழ் பூத்த மிருதங்க வித்துவான் கலாவித்தகர் திரு.சி.செந்தூரனிடம் முறையாக பயிற்சியைப் பெற்றுள்ளார். இவர் பாரம்பரிய கலையில் மட்டுமல்ல மேலைத்தேய வாத்தியக் கருவியான ஒகன் இசைப்பதிலும் வல்லவர். கலை கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் மிக்க ஆர்வம் கொண்ட மாணவன்.

இவர் வட இலங்கை சங்கீத சபையின் நான்காம் தரத்தில் கல்வி பயின்றுவருகின்னார். மிருதங்கக் கலையில் அரங்கேற்றம் செய்வது போன்று பல்வேறு கலைகளிலும் பல அரங்கேற்றங்கள் செய்ய இறைவனை வேண்டி அவரது அரங்கேற்றம் சிறப்புற அமைய வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

**செல்வி ந.பிரதா**
அதிபர்,
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்





# எங்கள் அன்புச் செல்வம் ஜனுக்குட்டியின் அரங்கேற்றம் சிறக்கட்டும்

எங்கள் அன்புச் செல்வம் ஜனுக்குட்டி இன்று மிருதங்க அரங்கேற்றம் செய்வதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

செல்வன் ஜனுசன் இறைவனால் அருளிச்செய்யப்பட்ட மிருதங்கக் கலையை முறையாகப் பயின்று அரங்கிற்கு வருகின்றான். செல்வன் ஜனுசன் கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன் அவர்களை குருவாகக் கொண்டு கலையை பயின்று இருப்பது எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இக்கலையை முறையாகப் பயின்று அரங்கேறும் ஜனுசன் இன்றும் பல கலைகளைக் கற்று கல்வியிலும் பண்பிலும் குரு பக்தியிலும் உயர்வடைந்து சகல செல்வங்களையும் பெற்று மென்மேலும் நீடூழி பல்லாண்டுகாலம் வாழ எல்லாம் வல்ல சிவஞான கருணாகரப் பிள்ளையாரையும் அவன் தம்பி சாளம்பை முருகனின் அருளையும் வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

**க.கருணாகரன்** (அப்பப்பா)
**க.விமலாதேவி** (அப்பம்மா)

கனடா

**க.ஜெகநாதன்**
**ஜெ.மோகனா**
**ஜே.ஜெனீக்கா**
**ஜெ.சிம்திகா**
} பெரியமாமா குடும்பத்தினர்

**மா.ரகு**
**ர.நிருபா**
} சின்னமாமா குடும்பத்தினர்





## பாட்டு

## தவமைந்தன் தவநாதன் றொபேட்

ஈழத்தமிழரின் செவ்வியல், நாட்டார் கலைகள் அனைத்திலும் ஆழக் கால்பதித்திருக்கும் ஆற்றுகையாளரான திரு. தவநாதன் றொபேட் அவர்கள் இசையமைப்பாளராக, பாடகராக, கருவியாளராக, எழுத்தாளராக, ஆய்வாளராகத் திகழ்ந்து வருகிற யாழ் பல்கலைக்கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் ஆவார்.

## வயலின்

## சுந்தரமூர்த்தி கோபிதாஸ்

வயலின் இசைக் கலையில் முதிர்ந்த அனுபவம் கொண்ட இசைக்கலைமானி சு.கோபிதாஸ் அவர்கள் இசைஞானதிலகம் உ.இராதாகிருஷ்ணன் அவர்களின் முதன்மை மாணவர் ஆவார். ஆற்றுகைத் துறையிலும் ஆசிரியத் துறையிலும் தனித்துவமான திறன் கொண்டவராக விளங்குகின்ற இவர் சங்கமம் எனும் வயலின் இசைக் கல்லூரியின் இயக்குனராகவும் திகழ்ந்து வருகின்றார்.





## கடம்

## நாகரத்தினம் மாதவன்

கலாவித்தகர், நுண்கலைமாணி, முதுகலைமாணி, ஆய்வியல் நிறைஞர் பட்டங்களை மிருதங்கத் துறையில் பெற்றிருக்கும் நாகரத்தினம் மாதவன் அவர்கள் சங்கீரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். எண்ணற்ற ஆற்றுகைகளிலும் அரங்கேற்றங்களிலும் மிருதங்கம், கடம் போன்ற கருவிகளை நுட்பமாக கையாண்டு வரும் இவர் வளர்ந்து வரும் இளங் கலைஞர்களுள் அர்ப்பணிப்பு மிகுந்த கலைஞர் ஆவார்.



## கஞ்சிரா

## நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா

பொருளியல் பட்டதாரியான நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா அவர்கள் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். கலை, ஆன்மீகம், ஓவியம், கவிதை, கட்டுரை போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்ற இவர் திருவாரூர் பக்தவத்சலம் அவர்களிடமும் கற்றவர். இசை நிகழ்வுகளிலும் ஒலிப்பதிகளிலும் பல ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகின்ற இவர் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றார்.

## முகர்சிங்

## துரைசிங்கம் சுபேஸ்



கலாவித்தகர், நுண்கலைமாணி போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கும் துரைசிங்கம் சுபேஸ் அவர்கள் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவராவார். மிருதங்கம், முகர்சிங் போன்ற கருவிகளை இசையரங்குகளில் வாசித்து வருகின்ற இவர் கிராம அலுவலராகவும் பணியாற்றி வருகின்றார்.



## தம்புரா

## நித்தியானந்தன் மோகனதர்சன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் உயர்தர கலைப்பிரிவு மாணவரான இவர் சங்கீதம், மிருதங்கம், வில்லிசை, நாடகம், போன்ற துறைகளில் ஆர்வமும் ஆற்றலும் கொண்டவராகக் கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்ற இளம் கலைஞர் ஆவார்.

வர்ணம்

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

இயற்றியவர் : ஸ்ரீநிவாசஐயங்கார்

பல்லவி

கா கா ரீ: ஸஸரிரி கக ரிரி ஸரிகரி ஸரிஸத ஸரிகப கரிஸரி

நின்னுகோ ரி யுன் னா னு ரா

கபகக ரிஸரிக ரிரிஸத ஸரிகரி கபக பதப தஸ் தாபக தபகரி

நி கி ல லோ க நா ய

அனுபல்லவி

காகா பா: ககபபததபா: தஸ்தத பகதபதக தபகரிஸரி

நன்னுபா லி ம்ப வை ய

ககபபதப தஸ்த ஸ்ரிஸ் க்ரீஸ் தஸ்ரிஸ்ாதபத ஸ்தாப கரிஸரி

நா மி த க்ரு ப ஜ ட ர

முக்தாயிஸ்வரம்

காரிக ரிஸரீ: ஸரிஸக ரிகஸரிஸத ஸரிகரி கபகபதாபா:

கபதபதஸ்ரிக் ரீக் ஸ்ாரி தாஸ் பாத ஸ்ரிக் ஸ்ாதபா கரிஸரி

சரணம்

காகாகா, ரி ரிகபக பா; ககததபாகத தபகப கரிஸரி

ஸன்னுதாங் க ஸ்ரீ நி வ ச

1. கா: ரீஸா ரீ: ரீதா ஸா: ரீ: காரீ

2. காகரி கரிஸரி காக பததஸரி காக கதபகரி காக ஸ்தபகரி

3. பாதத பாகரி ஸாரிக ரீஸத ஸாரிகபாதா ஸ்ஸாத பாகரி

4. ஸ்ாரிக ரிஸ்ரிஸ் தஸதப கரிஸரி ஸா:; ஸஸ ரிரி கக பப தத/
ஸ்ரிக்ரி க்ரி தஸ்ரிஸ்ரிஸ் பத ஸ்த ஸ்த கப தபதப ரிஸ்தபகரிஸரி//

★ ★ ★

இராகம் : நாட்டை தாளம் : ஆதி

இயற்றியவர் : மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்

பல்லவி

கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்

குணமதில் பலவாம் கூறக் கேளீர்

சரணம்

உட்செவி திறக்கும் அகக் கண் ஒளி தரும்

அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்

திக்கெல்லாம் சென்று ஜெயக் கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்

மத்திமகால சாகித்யம்
அச்சம் தீரும் அமுதம் விளையும்
வித்தை வளரும் வேள்வி ஓங்கும்
அமரர் தன்மை எய்தவும் இங்கு
நாம் பெறலாம் ஈதுணர்வீரே

★ ★ ★

இராகம் : நளினகாந்தி தாளம் : ரூபகம்
இயற்றியவர் : ஜி.என்.பாலசுப்பிரமணியம்
பல்லவி
நீ பாதமே கதி நளின காந்தி மதி
அனுபல்லவி
பூபால சோதரி புவனத்ரய வசங்கரி
சரணம்
நாபாபமு கோடி நன்னேலு கோதல்லி
ஸ்ரீபார்வதி சங்கரி சிதானந்த ஸ்ரியம் தேகி

★ ★ ★

இராகம் : ஸ்ரீரஞ்சனி தாளம் : ஆதி
இயற்றியவர் : ஊத்துகாடு வெங்கடசுப்பையர்
பல்லவி
நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும் - எங்கள்
நீல நிறமேனி மாதவன் செய்வது நிமிசம் போவது யுகமாய் அகுது
அனுபல்லவி
காதாரக் குழல் ஊதி கன்றொடு விளையாடி
கண்முன்னே வந்து நின்று ஆட்டமும் ஆடி
ஏதேதோ ஜாலங்கள் செய்வது போல் தோன்றி
எழிலுறு மங்கையர் மனைதொறும் புகுந்து
களவாடிடும் எனதாருயிர் மகனை
சரணம்
செய்யும் துஷ்டதனத்திற்கோ எல்லையோ இல்லை
தேடிப்பிடிக்க என்னால் சக்தியும் இல்லை
கையும் களவுமாக காணவும் இல்லை
காலம் தவறாது கோள் சொல்ல வந்து நின்ற
மாதற்கு விடை சொல்ல நேரமும் இல்லை

இராகம் : மனோரஞ்சனி தாளம் : ஆதி

இயற்றியவர் : தியாகராஜர்

பல்லவி

அடுகாதரானி பல்கனு அபிமான முலே கபோயனா

அனுபல்லவி

எடுலோர்த்தனு ஓ தயஜூடவையா ஏ வேல்பு சேயு சலமோ தெலிசி

சரணம்

வேதசாஸ்த்ரோபனிஷத் விடுதைன நிஜதாரினி

பட்டிதாசுடைன நாதுபை நெபமெஞ்சிதே தியாகராஜனுத

★ ★ ★

இராகம் தானம் பல்லவி

இராகம் : சண்முகப்பிரியா. சங்கராபரணம் தாளம் : கண்டஜாதி திருபுடை

இயற்றியவர் : க.ப.சின்னராசா

;; ஸரிகமா பதநீ ஸ்தா பமகம / பா: ஸ்நித /. பமகரீ மத // பமகரி

சண்முகப்ரியனே சதா சிவன்மக னே சங்கரா பரணனின் ஸ்வாமிநாத

★ ★ ★

இராகம் : கானடா தாளம் : ஆதி

இயற்றியவர் : ஊத்துகாடு வெங்கடசுப்பையர்

அலை பாயுதே கண்ணா என்மனம் அலைபாயுதே உன்

ஆனந்த மோகன வேணுகானமதில்

நிலை பெயராது சிலை போலவே நின்று

நேரமாவதறியாமலே மிக வினோதமான முரளீதர என்மனம்

தெளிந்த நிலவு பட்டப் பகல் போல் எரியுதே

திக்கு நோக்கி இரு புருவம் நெரியுதே

கனிந்த உன் வேணுகானம் காற்றில் வருகுதே

கண்கள் சொருகி ஒரு விதமாய் வருகுதே

கதித்த மனத்தில் உருத்தி பதத்தை எனக்கு அளித்து மகிழ்த்தவா ஒரு

தனித்த வனத்தில் அணைத்து எனக்கு உணர்ச்சி கொடுத்து முகிழ்த்தவா

கனைகடல் அலையினில் கதிரவன் ஒளியென இணையிரு களலெனக்களித்தவா

பதறி மனமுருகி நானழைக்கவோ இதர மாதருடன் நீ களிக்கவோ

இது தகுமோ இது முறையோ இது தர்மம் தானோ- குழல்

ஊதிடும் பொழுதில் ஆடிடும் குழைகள் போலவே மனது வேதனை மிகவொடு

இராகம் : இராகமாலிகை தாளம் : ஆதி (திஸ்ரநடை)

இயற்றியவர் : மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே என்முன்னே ஆடிவரும் தேரே

ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் உன்னைப் போய் ஆவி தழுவுதடி

உச்சிதனை முகர்ந்தால் கருவம் ஓங்கி உயருதடி
மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி

கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம் தான் கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி

உன்கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என்கண்ணில் பாவை அன்றோ கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றே

★ ★ ★

### தில்லானா

இராகம் : கல்யாண வசந்தம் தாளம் : ஆதி

இயற்றியவர் : வசாவிளான் தவமைந்தன்

பல்லவி

தனதீம். ஜெணு தீம். திமிதகஜெணு /
தீம் ; தஜெம். த / ணம். தஜெம். தணம்.//

அனுபல்லவி

தாம்தஜெம்.: தீம்தஜெம்.: தோம்/
தஜெம்.: ததர ததிமி தஜெணு //
நிஸ்ம்க் க்ரிரிஸ் ஸ்நிநித ஜெம்: தி /
மிதக ஜெணுதக ஜெம்: ஜெணுதக ஜெம் ;//
.தனதிரன தகதீம் தகதனதி /
ரன தகதீம் தகஜெணு தனதிரன//

சரணம்

இனிக்கும் இசைத்தமிழில் இதமாக உனைப்பாடி
கனிந்தருள் தரும் கந்தா போற்றிடுவேன்
உனைத்தினம் பணியும் தவமைந்தனில் மனமிரங்க
இனி என்ன தாமதம் இணுவைக் கந்தா சரணம்

தாம்தஜெம்.: தீம்தஜெம்.: தோம்/
தஜெம்.: ததர ததிமி தஜெணு //
நிஸ்ம்க் க்ரிரிஸ் ஸ்நிநித ஜெம்: தி /
மிதக ஜெணுதக ஜெம்: ஜெணுதக ஜெம் ://
.தனதிரன தகதீம் தகதனதி /
ரன தகதீம் தகஜெணு தனதிரன//

★ ★ ★

திருப்புகழ்

இராகம் : ஹமீர்கல்யாணி

தாளம் : ஆதி (கண்டநடை)

இயற்றியவர் : அருணகிரிநாதர்

ஐங்கரனை ஒத்தமனம் ஐம்புலம் அகற்றி மனம்
அந்தி பகலற்ற நினைவருள்வாயே
அம்புவி தனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தி உனை
அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே

தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்தி பெற
சந்திர வெளிக்கு வழி அருள்வாயே
தண்டிகைக னப்பவசு எண்திசை மதிக்க வளர்
சம்பிரம விதத்துடனே அருள்வாயே

மாங்கையர் சுகத்தைவெகு இங்கிதமெனுற்ற மனம்
உந்தனை நினைத்தமைய அருள்வாயே
மண்டலிகராப்பகலும் வந்த சுபரக்ஷை புரி
வந்தணைய புத்தியினை அருள்வாயெ

கொங்கிலுயிர் பெற்று வளர் தென் கரையில் அப்பரருள்
கொண்டு உடலுற்ற பொருள் அருள்வாயே
குஞ்சர முகற்கிளைய கந்தன் என வெற்றிபெறு
கொங்கண கிரிக்குள் வளர் பெருமாளே

★ ★ ★

# மனமார்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"



எனும் வள்ளுவத்தை முன்மொழிந்து நன்றிப் பயன் தூக்கி வாழும் தமிழர் தம் ஒப்புயர் பண்பாட்டின் உரைகல்லாம் எமது புத்திரன் ஜனுசன் அவர்களினது மிருதங்க கலைத்திறன் அரங்கேறும் நன்நாளில் அரங்கேற்றவேளை வரை உடனிருந்த உள்ளங்களை மீட்டுகின்றோம் நன்றியுடன்.

எமது மகனை சான்றோனாய் உயர்ந்திட வகைசெய்து அரங்கேறும்வரை அருகிருந்து மிருதங்கக் கலையின் நுணுக்கங்களைப் பக்குவத்துடன் பயிற்றுவித்த கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன் அவர்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

அத்துடன் விழாவிற்கு தலைமையேற்று நெறிப்படுத்திய தலைவர், விழாவினை அணிசெய்த முதன்மை விருந்தினர்,சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்களுக்கும் ஆசியுரை, வாழ்த்துரை, மதிப்பீட்டுரை வழங்கி விழாவினைச் சிறப்புறச் செய்த சான்றோர்க்கும் அரங்கம் இசை பூக்க இன்னிசை கானமழை பொழிந்த அரங்கிசைக் க்லைஞர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். விழாவிற்கு வருகை தந்த கலைஞர்கள் இசை இரசிகர்கள், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், விழாவிற்கு அரங்கு தந்துதவிய ஏழாலை முத்தமிழ் மன்ற சமூகத்தினருக்கும், ஒலி ஒளி வழங்கியோர், அழைப்பிதழ் மற்றும் அரங்கேற்ற மலரை அச்சேற்றியோர், புகைப்படம் மற்றும் காணொளி படப்பிடிப்பாளர் என அனைவரும் எம் நன்றிக்குரியவர்கள்.

**திரு.திருமதி நதீசன்**
கோட்டைக்காடு,
மல்லாகம்.

முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம். தொ.பே: 077-8038629